முருகப்பெருமான் துணை

**மகான் திருஞானசம்பந்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.12.2022, திங்கட்கிழமை

1. தலைவனாக தருமம் காத்திட
தவராஜனாக வந்த அரங்கனே
காலனை வெல்லும் சக்தியாக வந்த
கலியுக ஞானியே தேசிகனே
2. தேசிகனே உன்பெருமை கூறி
தெரிவிப்பேன் சுபகிருது தேள் திங்கள்
ஆசிபட மூவாறோர் திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 19 ம் நாள் 05.12.2022, திங்கட்கிழமை)
அறிவிப்பேன் அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை திருஞானசம்பந்தர் யானும்
அருளுவேன் உலகோர் நலம்பெற
ஆசிதந்து மக்களை அழைத்து
அனுகூலம் தரும் அரங்கன் மார்க்கம்
4. மார்க்கமே மனிதகுலம் காக்கும்
மகத்துவமிக்க ஞான மார்க்கம்
மார்க்கம் வழி உலக மக்கள்
மனமுவந்து சரணடைவு காண
5. காணவே மக்களிடை தேற்றம்
கண்ணியம் கட்டுப்பாடு தெளிவென
ஞானபலமாகக் கூடி இனிதே
நன்னடத்தை நற்சிந்தையாக மாறி
6. மாறியே குருவருள் துணைபெற
மாதரும சேவையுள் கலந்து
அறியாமை விலகி சடுதியாக
அகிலத்தார் தருமவான்களாவர்
7. ஆவரே தொண்டுடன் சேவைபலம்
ஆற்றலாகி கலியுக மக்கள்
அவதார ஞானி அரங்கன் தயவால்
ஆசியால் ஞானிகள் ஆவர்
8. அவனி காக்கும் அரங்கன் தருமம்
அவனி மீட்கும் அரங்கன் ஞானம்
அவனியோர் பிரணவக் குடிலை
அனுகி குருவடி தீட்சை பெற்று
9. பெற்றுமே குருவின் பேரருளை
பேருலகம் எங்கிலும் உலகமக்கள்
ஆற்றல்பட பரப்பி வருக
அனைவருக்கும் குருவருள் பெருகி

10. பெருகியே ஆறுமுகனார் ஆசியாக
பிரம்ம ஞான சூட்சும சக்தியாக
தரும வேலியாகவும் துணை
தரணியெங்கிலும் பெருகி இனிதே

11. இனிதே ஞான ஆட்சியாகவும்
இணையிலா ஞானிகள் தலைமையாகவும்
இனி உலகம் கண்டு மாறும்
இயம்பிய அனுகூல ஆசி முற்றே

–சுபம்–